# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

2011 பிறந்தவர்கள்

**பின்வரும் 10 குறள்களையும் ஒப்பித்தல் வேண்டும். விரும்பிய 2 குறள்களின் பொருள் விளக்கம் கூறுதல்.**

1. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் (குறள் 103)
நன்மை கடலின் பெரிது.
**என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்காமலே, அன்பின் காரணமாக ஒருவர் செய்த உதவியின் சிறப்பு கடலை விடப் பெரிது.**

2. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் (குறள் 542)
கோல்நோக்கி வாழுங் குடி.
**உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவது போல ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது.**

3. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை (குறள் 45)
பண்பும் பயனும் அது.
**இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதையொட்டிய நல்ல செயல்களும் தேவை.**

4. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின் (குறள் 293)
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.
**தன் நெஞ்சத்திற்குத் தெரியும் உண்மையை மறைத்து ஒருபோதும் பொய் சொல்லக் கூடாது; பொய் கூறினால் தன் நெஞ்சமே தன்னைச் சுடும்.**

5. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு (குறள் 80)
என்புதோல் போர்த்த உடம்பு.
**அன்பை அடிப்படையாகக் கொண்டதே உயிர் நிறைந்த இந்த உடம்பு, அன்பு மட்டும் இல்லை என்றால் இந்த உடம்பு வெறும் எலும்பின்மேல் தோலைப் போர்த்தியது போன்றது ஆகும்.**

2011 பிறந்தவர்கள்

6. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம் (குறள் 411)
செல்வத்துள் எல்லாம் தலை.
**செல்வங்களுள் மிகச் சிறந்த செல்வம் கல்வியைக் கேட்டு அறியும் செவிச்செல்வமே ஆகும்; அதுவே எல்லா செல்வங்களிலும் தலைசிறந்தது.**

7. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் (குறள்118)
கோடாமை சான்றோர்க் கணி.
**நடுநிலையில் நின்று பார்த்து, எடையை அளக்கும் கோலைப் போல, ஒரு பக்கமும் சாயாமல் நடுநிலைமை காப்பதே சான்றோர்களுக்கு அழகு.**

8. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை (குறள் 645)
வெல்லும்சொல் இன்மை அறிந்து.
**நாம் பேசும் சொல்லை வேறு எந்தச் சொல்லாலும் வெல்ல முடியாத அளவுக்குக் குற்றம் இல்லாத சிறந்த சொற்களாகத் தேர்ந்தெடுத்துப் பேச வேண்டும்.**

9. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து (குறள்517)
அதனை அவன்கண் விடல்.
**ஒரு செயலை இன்ன கருவியால், இவன் செய்து முடிப்பான் என்று நன்கு ஆராய்ந்த பின்னரே, அந்தத் தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.**

10. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் (குறள் 102)
ஞாலத்தின் மாணப் பெரிது.
**உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவாக இருந்தாலும், அதன் தன்மையை அறிந்தால் உலகைவிட மிகப் பெரிதாகும்.**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.